# மாகாணக்கல்வித்திணைக்களம்

## வடமாகாணம்

## க.பொ.த (உ/த) பரீட்சை - 2020

## பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்

**பரதநாட்டியம் II (53T II)** **நேரம்-3மணி**

பகுதி 1 இல் **முதலாம் வினா** உட்பட **இரண்டு** வினாக்களையும் பகுதி 11 இல் எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி1

1.

1) பதவர்ணத்தின் இலட்சணத்தை எழுதுக. (03புள்ளிகள்)
2) நீர் கற்ற பதவர்ணத்தின் இராகம், தாளம், இயற்றியவர் பெயர், நடனஅமைப்பாளர், பாடலுக்குரிய கடவுள் ஆகியவற்றைக் குறிப்பிடுக. (05புள்ளிகள்)
3) நீர் கற்ற பதவர்ணத்தின் இரண்டாவது தீர்மானத்தின் சொற்கட்டினைத் தாள அங்கக் குறியீடுகளுடன் எழுதுக. (06புள்ளிகள்)
4) இதில் வரும் முத்தாயிஸ்வரக் கோர்வையின் சொற்கட்டினையும் அதன் பாடல் வரிகளையும் தாள அங்கக் குறியீடுகளுடன் எழுதுக. (06புள்ளிகள்)

2.

1) மணிப்புரி நடனத்தின் தோற்றம் பற்றி சுருக்கமாகத் தருக. (02புள்ளிகள்)
2) இந்நடனத்தில் பிரபல்யமான கலைஞர்கள் இருவரின் பெயர்களைத்தருக. (02புள்ளிகள்)
3) இந்நடனத்திற்குரிய ஆடைஅணிகள் எவை? (03புள்ளிகள்)
4) இந்நடனத்திற்குரிய இசை,பக்கவாத்தியம் என்பவற்றைத் தருக. (03புள்ளிகள்)
5) மணிப்புரி நடனத்தின் ஆடல்முறைகள் பற்றி விளக்குக. (04புள்ளிகள்)
6) மணிப்புரி நடனத்தின் வளர்ச்சி பற்றி விளக்கி எழுதுக. (06புள்ளிகள்)

3.

1) அபிநயம் என்றால் என்ன? (02புள்ளிகள்)
2) அபிநயத்தின் வகைகள் எவை? (02புள்ளிகள்)
3) அவற்றை ஒவ்வொன்றினதும் உட்பிரிவுகளுடன் விளக்குக. (4x4=16புள்ளிகள்)

## பகுதி 2

4.

1) சிவனின் சப்த தாண்டவங்களையும் அவற்றின் தொழில்களையும் குறிப்பிடுக. (07புள்ளிகள்)
2) நடராஜதிருவுருவத்தின் ஒவ்வொரு அங்கங்களும் குறிக்கும் தத்துவத்தினைக் கருத்துக்களை விளக்குக. (13புள்ளிகள்)

5.

1) கலைகளின் பொற்காலமாக விளங்கும் சோழர்காலப்பகுதியைக் குறிப்பிடுக. (01புள்ளி)
2) இக்காலத்தில் ஆடப்பட்ட கூத்துக்கள் பற்றி விளக்குக. (02புள்ளிகள்)
3) இக்காலத்தில் எழுதப்பட்ட புதிய கலையிலக்கண நூல்கள் இரண்டு தருக. (02புள்ளிகள்)
4) சோழர்கால ஆடற்கலைஞர்கள் பற்றி விளக்குக. (05புள்ளிகள்)
5) சோழர்கால ஆடற்கலை அரங்குகள் பற்றி விளக்குக. (05புள்ளிகள்)
6) சோழர்காலக் கலை வளர்ச்சியை பிரதிபலிக்கும் ஆதாரங்களை விளக்கி எழுதுக. (05புள்ளிகள்)

6. பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

1) அபிசாரிகா
2) மத்தளம்
3) வசந்தன்கூத்து
4) சப்ரகமுவநடனம் (4x5=20புள்ளிகள்)

7.

1) திருமயிலைக் குறவஞ்சி எனும் நாட்டியநாடகத்தை எழுதிய நாட்டியக்கலைஞர் யார்? (2புள்ளிகள்)
2) அவருடைய வாழ்க்கை வரலாற்றினைச் சுருக்கமாக எழுதுக. (08புள்ளிகள்)
3) அவர் நாட்டியக்கலைக்கு ஆற்றிய பணிகளை வரிசைப்படுத்தி எழுதுக. (10புள்ளிகள்)

8. "இலங்கையில் பரதக்கலை வளர்ச்சியில் பல அரசசார்பான நிறுவனங்கள் பெரும்பங்காற்றிவருகின்றன." இக்கூற்றினை நீர் கற்ற விடயங்களினூடாக விளக்கி எழுதுக. (20புள்ளிகள்)